# பருவத் தேர்வு - 1

## மகிழ்ச்சி - ஐந்தாம் வகுப்பு

மதிப்பெண்கள் : 50 காலம் : 2½ மணி

---

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5 x 1 = 5**

1. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலுள்ள நீதி நூல்களின் எண்ணிக்கை ______________ .

   அ. 10 ஆ. 7 இ. 11 ஈ. 9

2. தமிழ் இலக்கணம் ______________ வகைப்படும்.

   அ. மூன்று ஆ. ஐந்து இ. ஆறு ஈ. நான்கு

3. ஐ.பி.சி. கிராண்ட் பிரிக்ஸ் தொடரில் மாரியப்பன் தாண்டிய உயரம் ______________.

   அ. 1.88 மீட்டர் ஆ. 1.89 மீட்டர்

   இ. 1.78 மீட்டர் ஈ. 1.79 மீட்டர்

4. “இன்னா” எனும் சொல்லின் பொருள் ______________.

   அ. துன்பம் ஆ. மகிழ்ச்சி இ. வியப்பு ஈ. கவலை

5. கலை என்பது மனிதர்களின் ______________ உணர்வுகளின் வெளிப்பாடு ஆகும்.

   அ. மூளை ஆ. மன

   இ. நம்பிக்கை ஈ. விளையாட்டு

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** **5 x 1 = 5**

1. ______________ தலைகாண் பரிது.
2. திரிகடுகத்தை இயற்றியவர் ______________.
3. எழுவாய் என்பது ______________.
4. வெறுங்கை என்பது ______________.
5. தாராபாரதியின் இயற்பெயர் ______________.

**III. பொருள் எழுதுக.** 5 x 1 = 5

1. இகழ்ச்சி – ____________
2. பூசனை – ____________
3. தருமம் – ____________
4. கொடை – ____________
5. கீர்த்தி – ____________

**IV. பிரித்து எழுதுக.** 5 x 1 = 5

1. நெடுங்கடல் – ____________
2. பருவமழை – ____________
3. அறவினை – ____________
4. பழங்காலம் – ____________
5. பசும்புல் – ____________

**V. எதிர்ச்சொல் எழுதுக.** 5 x 1 = 5

1. இகழ்ச்சி x ____________
2. பொய் x ____________
3. அரிது x ____________
4. வானம் x ____________
5. தோல்வி x ____________

**VI. பொருத்துக.** 5 x 1 = 5

1. திரிகடுகம் • • முன்றுறை அரையனார்
2. பழமொழி • • சிறிய சொம்பு, குடம்
3. புலியாட்டம் • • நல்லாதனார்
4. கரகாட்டம் • • செப்டம்பர் 5
5. இந்தியா • • புலி வேடம்

**VII. சிறுவினாக்கள்: (எவையேனும் ஐந்திற்கு மட்டும் விடையளிக்கவும்)** 5 x 2 = 10

1. தமிழ் மொழி எத்தகையது?
2. நாலடியாரின் சிறப்புப் பெயர்கள் யாவை?
3. திரிகடுகம் என்பது எவற்றின் கலவை?
4. ரியோ பாரா ஒலிம்பிக் 2016 இல் மாரியப்பன் வென்ற பதக்கம் யாது?
5. எழுவாய் என்பது யாது? எடுத்துக்காட்டு தருக.
6. எவரின் கொடைத் தன்மை துன்பமாகும்?
7. “ நாட்டுப்புறக் கலைகள்” என்றால் என்ன?
8. வினா எழுத்துகள் எத்தனை? அவை யாவை?
9. குற்றால நாட்டில் அஞ்சி ஓடுவது எது?
10. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**VIII. பெருவினாக்கள்: (எவையேனும் இரண்டிற்கு மட்டும் விடையளிக்கவும்)** 2 x 5 = 10

1. “தானம் தவமிரண்டும்” மற்றும் “நீரின் றமையா” எனத் தொடங்கும் குறள்களை அடி பிறழாமல் எழுதுக.
2. ‘‘அறிவுரைக் கோவை’’ என்றழைக்கப்படும் நூல் எது? அந்நூலின் சிறப்பினை எழுதுக.
3. “பிறர்தன்னைப் பேணுங்கால்” எனத் தொடங்கும் திரிகடுகம் பாடலை எழுதுக.
4. “இன்னா நாற்பது” – நூல் குறிப்பு வரைக.
5. கலை என்றால் என்ன? சிறு குறிப்பு தந்து விளக்குக.
6. குற்றால மலைவளம் பற்றி எழுதுக.
7. தெரு மின்விளக்கு வசதி வேண்டி மாநகராட்சி ஆணையருக்கு விண்ணப்பக் கடிதம் எழுதுக.